بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 22/03/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஞானமிக்க வழிகாட்டல்களின் ஒளியில் திருக்குர்ஆனுடைய சிறப்புகள், தகுதி, அந்தஸ்து மற்றும் மகத்துவம்

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

شَهۡرُ رَمَضَانَ الَّذِيۡٓ اُنۡزِلَ فِيۡهِ الۡقُرۡاٰنُ هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الۡهُدٰى وَالۡفُرۡقَانِ ۚ فَمَنۡ شَهِدَ مِنۡكُمُ الشَّهۡرَ فَلۡيَصُمۡهُ ؕ وَ

مَنۡ كَانَ مَرِيۡضًا اَوۡ عَلٰى سَفَرٍ فَعِدَّةٌ مِّنۡ اَيَّامٍ اُخَرَ ؕ يُرِيۡدُ اللّٰهُ بِكُمُ الۡيُسۡرَ وَلَا يُرِيۡدُ بِكُمُ الۡعُسۡرَ ۫ وَلِتُكۡمِلُوا الۡعِدَّةَ وَلِتُكَبِّرُوا

اللّٰهَ عَلٰى مَا هَدٰٮكُمۡ وَلَعَلَّكُمۡ تَشۡكُرُوۡنَ ﴿۱۸۶﴾ **(திருக்குர்ஆன் 2:186)**

இந்த வசனத்தில் அல்லாஹ் ரமலான் மாதத்தின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துரைக்கும்போது, இந்த மாதத்தில் திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது; அது மனிதர்களுக்கு ஒரு மாபெரும் நேர்வழி என்ற வகையில் கூறியிருக்கிறான். அல்லாஹ் இந்த வேதத்தில் அனைத்து விஷயங்களைக் குறித்தும் எடுத்துக் கூறி, அனைத்து வழிகாட்டல்களையும் வழங்கி, மனிதன் அல்லாஹ்வின் பக்கம் முன்னேறுவதற்கான எல்லா வழிகளையும் காட்டிக் கொடுத்துள்ளான். ஷைத்தானுடைய எல்லா வழிகளைக் குறித்தும் எச்சரிக்கையூட்டியவாறு, நிகழ்காலத்திலும் பிற்காலத்திலும் நிகழக்கூடிய விவகாரங்களின் பக்கம் வழிகாட்டியவாறு, அதன் ஆபத்துகளைப் பற்றி எச்சரிக்கையூட்டியவாறு அதிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளைக் காட்டிக் கொடுத்துள்ளான். அத்துடன் நாத்திகத்தை எதிர்கொள்வது குறித்தும், ஷிர்க்கிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளைக் குறித்தும் கற்றுக் கொடுத்துள்ளான். சுருக்கமாக, தற்காலத்தின் விவகாரங்களாக இருக்கட்டும்! அல்லது கடந்த காலத்தில் உள்ளவையாக இருக்கட்டும்! அல்லது வருங்காலத்தில் நிகழக்கூடியவையாக இருக்கட்டும்! அந்த அனைத்தையும் திருக்குர்ஆனில் எடுத்துக் கூறி இறை தொடர்பில் முன்னேறுவது தொடர்பாகவும், நேர்வழியில் நிலைத்திருப்பது தொடர்பாகவும் அனைத்து வழிகளையும் இந்த இறுதியான, முழுமையான, நிறைவான ஷரீஅத்தில் எடுத்துக் கூறியுள்ளான்.

ஆகவே, எவர்கள் இந்த மாபெரும் வேதத்தைத் தமது செயல் திட்டமாக ஆக்கிக் கொண்டவாறு அதன்படி செயல்படுவார்களோ, தம்முடைய இம்மை மற்றும் மறுமை ஆகியவற்றை சீர்படுத்திக் கொள்வார்களோ அவர்கள் நற்பேறு

பெற்றவர்களாவார்கள். உண்மையில் நிலைத்திருந்தால், பிறகு அல்லாஹ் தன் அடியார்களுடன் அன்புடன் பரிமாறக்கூடிய காட்சிகளையும் காண்பார்கள்.

ஆகவே, இதுதான் ரமலான் மாதத்தின் முக்கியத்துவமாகும். இந்த மாதத்தில் அல்லாஹ் முழுமையான ஷரீஅத்தை நம் மீது இறக்கியுள்ளான். இந்த வேதத்தில் நோன்பு கடமையானது குறித்தும், இறை வணக்கங்களின் வழிமுறைகளைக் குறித்தும் கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. நாம் இந்த முழுமையான வழிகாட்டலைக் குறித்து அறிவைப் பெறாத வரை, அதை நம் வாழ்வின் செயல் திட்டமாக ஆக்காத வரை ரமலானின் முக்கியத்துவம் குறித்த புரிதலை நாம் பெற முடியாது!

அஹ்மதிகளாகிய நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். ஏனென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை ஊழியரான மஸீஹ் மவ்ஊது, மஹ்தி மஃஹூது (அலை) அவர்கள் இதைக் குறித்த புரிதலை நமக்கு வழங்கி இருக்கிறார்கள். இந்த மாபெரும் வழிகாட்டலைப் புரிந்து கொண்டு அதன்படி செயலாற்றுவதற்காக நாம் அன்னாருடைய நூல்களையும், விளக்கவுரைகளையும் படிக்க வேண்டியது அவசியமாகும். மஸீஹ் மவ்ஊது தினத்தில் நாம் மிகவும் முறையாக கூட்டங்கள் போன்றவற்றையும் நடத்துகின்றோம்; அதைக் கொண்டாடுகின்றோம். பெருமானார் (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு மற்றும் அல்லாஹ்வுடைய வாக்குறுதிக்கேற்ப மஸீஹ் மவ்ஊது அவர்களின் வருகை குறித்து சொற்பொழிவாற்றுகின்றோம். ஆனால் ஈமானுடைய முன்னேற்றம் இந்த அளவுக்கு மட்டுமே இருப்பது போதுமானதன்று. மாறாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் திருக்குர்ஆன் தொடர்பாக நமக்கு வழங்கிய கருவூலங்களைப் படிப்பதும், அதன்படி செயலாற்றுவதும், அதை நமது வாழ்வின் அங்கமாக ஆக்குவதும் மிகவும் அவசியமாகும். அது அல்லாமல் நமது ஈமான் முழுமையாக முடியாது.

ரமலானில் நோன்பு நோற்பது, கடமையான தொழுகைகளை முறையாக நிறைவேற்றுவது அல்லது சில நஃபில்களைத் தொழுவது ஆகியவற்றால் மட்டும் ரமலானுடைய உரிமை செலுத்தப்பட்டு விடாது. மாறாக, திருக்குர்ஆன் ஓதுவதும் அதன் கட்டளைகளைத் தேடிப் பார்த்து அதன்படி செயல்படுவதும் மிகவும் அவசியமாகும். இந்த விஷயம்தான் அல்லாஹ்வுடைய ரஹ்மானிய்யத் எனும் பண்பிலிருந்தும் ரஹீமிய்யத் எனும் பண்பின் தோற்றத்திலிருந்தும் பயனடையக் கூடியவர்களாக நம்மை ஆக்கும். இதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் எண்ணற்ற வழிகாட்டல்கள், எழுத்துக்கள் ஆகியவற்றைப் படித்து அதன்படி செயல்பட்டால் நாம் உண்மையான முறையில் திருக்குர்ஆனில் இருந்து பயனடையக்கூடியவர்களாக ஆக முடியும்!

ரமலானில் குறிப்பாக ஒவ்வொருவரும் தினந்தோறும் குறைந்தது ஒரு ஜுஸ்வு (பாகம்) திலாவத் செய்ய வேண்டும். அதன் மூலமாக ரமலானில் திருக்குர்ஆன் ஒருமுறை முழுமையாக ஓதி முடிக்கப்பட வேண்டும். ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அதுவரை இறங்கிய திருக்குர்ஆனை ரமலானில் ஒரு முறை முழுமையாக ஓதிக் காட்டுவார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடைய (வாழ்வின்) இறுதி ஆண்டில் முழு குர்ஆனும் இரண்டு முறை ஓதி முடிக்கப்பட்டது. ஆகவே திருக்குர்ஆன் ஓதுவதன் முக்கியத்துவத்தை ஒவ்வொருவரும் தம் முன்னால் வைக்க வேண்டும்.

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡہِ الۡقُرۡاٰنُ **என்ற வசனம் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “இந்த ஒரு வாக்கியத்தின் மூலமாக

ரமலானுடைய மகத்துவம் தெரிய வருகிறது! இந்த மாதம் உள்ளத்திற்கு ஒளியூட்டுவதற்கு சிறந்த மாதமாகும் என்று சூஃபிமார்கள் எழுதியுள்ளார்கள். அதிகமான அளவில் இதில் கஷ்ஃப்கள் ஏற்படுகின்றன. தொழுகை உள்ளத்தைத் தூய்மைப்படுத்துகிறது. நோன்பு உள்ளத்திற்கு ஒளியூட்டுகிறது.”

**அன்னார் கூறுகிறார்கள்:** “நான் குர்ஆன் என்ற சொல்லை கவனமாக சிந்தித்தேன். அப்போது இந்த அருளுக்குரிய சொல்லில் ஒரு மகத்தான முன்னறிவிப்பு இருப்பது எனக்குத் திறந்து தரப்பட்டது. அது என்னவென்றால், இந்த குர்ஆன்தான் படிப்பதற்குத் தகுதியுடைய நூலாகும். பிறகு இன்னொரு காலத்தில் இதுதான் இன்னும் அதிகமாக படிப்பதற்குத் தகுதியுள்ள வேதமாக இருக்கும். அப்போது வேறு பல நூல்களும் திருக்குர்ஆனுடன் சேர்ந்து படிக்கப்படும்......... எனவே இப்போது அனைத்து நூல்களையும் விட்டு விடுங்கள். இரவும் பகலும் அல்லாஹ்வின் வேதத்தை மட்டுமே படியுங்கள். நமது ஜமாஅத் திருக்குர்ஆனைப் படிப்பதிலும் அதில் சிந்தனை செய்வதிலும் உயிராலும் உள்ளத்தாலும் ஈடுபட வேண்டும். ஹதீஸுகளின் ஈடுபாட்டை விட்டு விடுங்கள். இப்போது திருக்குர்ஆன் எனும் ஆயுதத்தைக் கையில் எடுங்கள். அப்பொழுது வெற்றி உங்களுக்கே! இந்த ஒளிக்கு முன் எந்த இருளும் நிற்க முடியாது. எவர்கள் திருக்குர்ஆனுக்குக் கீழ்படிந்து செல்கிறார்களோ அவர்களே வெற்றி பெற முடியும். திருக்குர்ஆனை விட்டுவிட்டு வெற்றி கிடைப்பது என்பது சாத்தியமற்ற, இயலாத விஷயமாகும். சஹாபிகளுடைய முன்மாதிரிகளை உங்களுக்கு முன்னால் வையுங்கள். பாருங்கள்! பெருமானார் (ஸல்) அவர்களை அம்மக்கள் பின்பற்றிய போது, உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கிய போது, அல்லாஹ் அவர்களிடம் செய்த அனைத்து வாக்குறுதிகளையும் பூர்த்தி செய்தான்.”

**அன்னார் கூறுகிறார்கள்:** “எப்பொழுது வரை முஸ்லிம்களுடைய கவனம் திருக்குர்ஆன் பக்கம் திரும்பாதோ அப்போது வரை அவர்களிடத்தில் அந்த ஈமான் உருவாகாது; அவர்கள் சீராக மாட்டார்கள். கண்ணியமும் முன்னேற்றமும் முதலில் எந்த வழியின் மூலமாக வந்ததோ இப்பொழுதும் அதே வழியின் மூலமாகத்தான் வரும். ஆகவே ஈமான் மற்றும் செயல் ஆகியவற்றில் முன்னேற்றமும் உலக மக்களைப் பின்பற்றுவதால் கிடைக்காது. மாறாக திருக்குர்ஆனைப் பின்பற்றுவதால் கிடைக்கும்.”

**அன்னார் கூறுகிறார்கள்:** “எவர் உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைக்கிறாரோ, அவனுடைய தூய வேதத்தின் படி அமல் செய்கிறாரோ, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறாரோ அவருக்கு அல்லாஹ் முடிவடையாத அருள்களிலிருந்து பங்கு கொடுக்கின்றான். அவருக்கு எவ்வாறான அருள்கள் கொடுக்கப்படுகின்றனவென்றால் அது இவ்வுலக அருள்களை விட எவ்வளவோ அதிகமாக இருக்கும். அவற்றுள் ஒன்று பாவம் மன்னிக்கப்படுதலும் ஆகும். அதாவது, அவர் பாவமன்னிப்பு கேட்கும் போது, தவ்பா கேட்கும் போது இறைவன் அவருடைய பாவத்தை மன்னித்து விடுகின்றான். மற்ற மக்கள் இந்த அருளை விட்டு முற்றிலும் அறியாதவர்களாக இருக்கின்றனர்.”

**அன்னார் கூறுகிறார்கள்:** “என் விஷயங்களை முழு கவனத்துடன் கேளுங்கள்! அவற்றிற்கு உள்ளத்தில் இடம் கொடுங்கள். நீங்கள் அவற்றை மேலோட்டமாக கேட்கவில்லை என்பதையும், அவற்றினுடைய தாக்கம் அந்த நொடிப் பொழுதுக்கு மட்டும் இல்லை என்பதையும் உங்களது செயலால் நிரூபித்துக் காட்டுங்கள்.”

இங்கே உட்கார்ந்து கொண்டு குத்பாவைக் கேட்ட வரை மட்டும் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்காமல் பிறகும் அதன்படி அமல் செய்ய வேண்டும். அதனுடைய அமல் என்னவென்றால் திருக்குர்ஆனை ஓத வேண்டும். ரமலானில் அதற்கான பழக்கத்தை ஏற்படுத்துங்கள். பிறகு வாழ்வினுடைய நிரந்தர அங்கமாக ஆக்குங்கள். பிறகு அதன் போதனைப்படி நாம் அமல் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

அஹ்மதிகள் மீது சுமத்தப்படுகின்ற அவதூறு என்னவென்றால், நவூதுபில்லாஹ்! நாம் திருக்குர்ஆனில் மாற்றங்களை செய்கிறோம் என்று கூறுகிறார்கள். **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “திருக்குர்ஆன் விண்ணின் சட்டமும், இரட்சிப்பின் வழிமுறையும் ஆகும். அதில் நாம் மாற்றம் செய்தால் அது மிகக் கடுமையான பாவமாகும். நாம் யூதர்கள் மீதும் கிறிஸ்தவர்கள் மீதும் ஆட்சேபனை செய்து கொண்டு பிறகு திருக்குர்ஆனுக்கு அதையே ஆகுமானதாகக் கருதுவது வியப்பாக உள்ளது! கிறிஸ்தவர்களுடைய வேதங்கள் உண்மையாகவே மாற்றப்பட்டு விட்டன. மாற்றப்பட்டது நிரூபிக்கப்படக் கூடாது என்று அவர்கள் முயற்சி செய்கிறார்கள். ஆனால் நாமோ மாற்றம் செய்வதற்கான கவலையில் இருப்பது எனக்கு இன்னும் வருத்தமாகவும், வியப்பாகவும் உள்ளது.”

**அன்னார் கூறுகிறார்கள்:** “எவர்கள் இறைவனுக்காக தமது நஃப்ஸுடன் போர் செய்கிறார்களோ அவர்கள் அருளுக்குரியவர்கள் ஆவார்கள். எவர்கள் தமது நஃப்ஸுக்காக இறைவனிடம் போர் செய்கிறார்களோ, அவனுடன் பொருத்தத்தை மேற்கொள்வது கிடையாதோ அவர்கள் பேரிழந்தவர்கள் ஆவார்கள். எவர் தன் நஃப்ஸுக்காக இறைவனுடைய கட்டளைகளைத் தள்ளிப் போடுகிறாரோ அவர் ஒருபோதும் விண்ணில் நுழைய முடியாது. ஆகவே நீங்கள் முயற்சி செய்யுங்கள். திருக்குர்ஆனின் ஒரு புள்ளியோ ஒரு சுழியோ கூட உங்களுக்கு எதிராக சாட்சி கூற வேண்டாம். அதனால் நீங்கள் பிடிக்கப்பட்டு விட வேண்டாம். ஏனென்றால் ஓர் அணு அளவு தீமையும் கூட தண்டனைக்குரியதாக உள்ளது. நேரம் குறைவாக உள்ளது; வாழ்க்கை நிச்சயமற்றதாக உள்ளது. வேகமாக அடி எடுத்து வையுங்கள்; மாலை அருகில் வந்துவிட்டது. எதை எடுத்து வைக்க வேண்டுமோ அதை மீண்டும் மீண்டும் பாருங்கள்; ஏதேனும் விடுபட்டு விடக்கூடாது; அது நஷ்டத்திற்கு வழி வகுத்து விடக்கூடாது. அல்லது அனைத்து செல்வமும் அசுத்தமானதாகவும், செல்லாக் காசாகவும் இருந்துவிடக் கூடாது. அவை அரசவையில் எடுத்து வைப்பதற்குத் தகுதியற்றவையாக இருந்து விடக்கூடாது.”

உண்மையான முறையில் திருக்குர்ஆனுடைய போதனையைப் புரிந்து அதன்படி செயல்படக்கூடிய நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! நாம் எப்பொழுதும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாக இருப்போமாக! நாம் ரமலானில் மட்டுமின்றி எப்பொழுதும் திருக்குர்ஆனுடைய போதனைக்கேற்ப நமது வாழ்வைக் கழிக்கக் கூடியவர்களாக இருப்போமாக! இவை நிகழும் என்றால் அப்பொழுதுதான் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்தோம் என்று நாம் கூற முடியும்! அல்லாஹ் இந்த ரமலானிலும் அதற்குப் பிறகும் எப்பொழுதும் திருக்குர்ஆனுடைய போதனைகளில் இருந்து பயன்பெறக்கூடிய நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக!

பாலஸ்தீனர்களையும் துஆக்களில் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். போர் மட்டுமின்றி பசியாலும், நோயினாலும் இப்பொழுது குழந்தைகள் மற்றும் அப்பாவிகளின் உயிர்கள் வீணாகிக் கொண்டிருக்கின்றன. ‘இது மனிதனால் உருவாக்கப்பட்டுள்ள பஞ்சமும் பசியும் அழிவும் ஆகும். இஸ்ரேலிய அரசாங்கத்தின் கடுமை மற்றும் பிடிவாதத்தின் காரணமாக இது உருவாகிக் கொண்டிருக்கிறது’ என்று இப்பொழுது ஐ.நா அமைப்பும் கூற ஆரம்பித்து விட்டது. வழிகள் திறந்து விடும் என்றால், உதவிகள் விரைவாக சென்றடைந்து விடும் என்றால் இப்பொழுதும் கூட (நிலைமையில்) முன்னேற்றம் ஏற்பட முடியும். அதேபோன்று, சூடானுடைய பொதுமக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்களின் தலைவர்களுக்கும், அதிகார பலம் கொண்டவர்களுக்கும் அல்லாஹ் அறிவை வழங்குவானாக! அங்கும் பசியாலும் நோயினாலும் மக்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள். அந்நாட்டு மக்களே தம் மக்கள் மீது அநீதி இழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அனைத்தும் ஏன் நிகழ்கின்றன என்றால், உலக ஆசைகள், திருக்குர்ஆனுடைய போதனையை அவர்கள் மறந்து விட்டது, அல்லாஹ்வின் சார்பாக இந்தக் காலத்தில் அனுப்பப்பட்டவரை ஏற்றுக்கொள்ள மறுத்து கொண்டிருப்பது ஆகியவை ஆகும். இதேபோன்று இன்னும் பல முஸ்லிம் நாடுகளின் நிலைகளும் உள்ளன. அங்கும் பெரும் துன்பத்தின் நிலை காணப்படுகிறது. அரசாங்கங்கள் தம் குடிமக்களின் மீது அநீதி இழைத்துக் கொண்டிருக்கின்றன. பரஸ்பரம் மக்கள் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் அவர்கள் மீது கருணை காட்டுவானாக! பாகிஸ்தானில் உள்ள நமது அஹ்மதி சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். ஏமனில் உள்ள சிறைவாசிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். பாகிஸ்தானுடைய பொதுவான நிலைகளுக்காகவும் துஆ செய்து வாருங்கள். அஹ்மதிகளை அல்லாஹ் பாதுகாப்பானாக!

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் குத்பாவின் இறுதியில் அமெரிக்காவைச் சார்ந்த மதிப்பிற்குரிய டாக்டர் ஸஹீருத்தீன் மன்சூர் அஹ்மது சாஹிப் (இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது அலை..., அவர்கள் மற்றும் ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ரலி..., ஆகியோரின் மகள் வழி கொள்ளுப் பேரரும், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது ரலி..., அவர்களின் பேரரும் ஆவார்கள்), கனடாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய ஹசன் ஆப்தீன் ஆஃகா சாஹிப், சவூதி அரேபியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய உஸ்மான் ஹுசைன் முஹம்மது கைர் சாஹிப், அல்ஜீரியாவைச் சார்ந்த முஹம்மது ஸுஹ்ராபி சாஹிப், ரப்வாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய சயீது அஹ்மத் வர்ராய்ச் சாஹிப் மற்றும் ஹாலந்தைச் சார்ந்த ஷெஹ்பாஸ் ஃகோந்தல் சாஹிப் ஆகியோரின் வஃபாத், நற்குறிப்பு மற்றும் அவர்களின் ஜமாஅத் தொண்டுகள் குறித்து எடுத்துரைத்த பிறகு அவர்கள் அனைவரின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவிப்பும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ
وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى
الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**